**அ.வ.எண். 70/2024 வா.சா.1–தனலெட்சுமி 24.02.2025**

**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நானும், 2ம் வாதியும் ஒரே வீட்டில் வசித்து வருகிறோம். என் கணவர் இறக்கும்வரை, நானும், என் கணவரும் ஒரே வீட்டில் வாழ்ந்து வந்தோம். பெரியம்மாள் என்பவரிடமிருந்து என் கணவர் ஒரு சொத்தை கிரயம் வாங்கினார். என் கணவருக்கும், அவரது சகோதரர் கிருஷ்ணன் என்பவருக்கும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினையில் என் கணவருக்கும், என் குழந்தைகளுக்கும் ஒரு சொத்து கிடைத்தது. என் கணவருக்கு மேற்சொன்ன இரண்டு சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் கிடையாது என்றால் நத்தம் புறம்போக்கில் வீடு உள்ளது. நத்தம் புறம்போக்கில் உள்ள வீட்டின் சர்வே எண் எனக்கு தெரியாது. என் கணவருக்குதான் தெரியும். வேறு சொத்துக்கள் என் கணவர் பெயரில் உள்ளது என்பதை காட்டுவதற்கு நான் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வீட்டுவரி ரசீது, தண்ணீர் வரி ரசீது தாக்கல் செய்துள்ளேன். 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக, என் மகன் இவ்வழக்கை தவிர வேறு எத்தனை வழக்குகள் தாக்கல் செய்துள்ளார் என்றால் வேறு ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார். என் கணவர் 2015ம் வருடத்தில் மாசி மாதம் கடைசியில் மாரடைப்பு ஏற்பட்டு, இறந்துபோனார். என் கணவர் இறக்கும்வரை, என் மகன் 2ம் வாதி கேரளாவில் வசித்து வந்தார். போய்வர இருந்தார். என் கணவர் இறக்கும்போது, அவரை நானும், என் மகளும் மருத்துவமனையில் சிகிச்சை அளித்து வந்தோம் என்றால் என் மகனும் வந்துவிட்டார்.

என் கணவர் உயில் எழுதி வைத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. எழுதிய பிறகு, என் கணவர் என்னிடம் கூறினார். வழக்கு காலத்தில் என் கணவர் உயில் எழுதி வைத்த விவரத்தை என் மகன் என்னிடம் கூறினாரா என்றால் என் மகனுக்கு உயில் எழுதி வைத்த விவரம் தெரியாது. உயிலில், பெரியம்மாளிடம் என் கணவர் வாங்கிய சொத்து, நத்தம்புறம்போக்கில் உள்ள வீடு, பாகப்பிரிவினையில் கிடைத்த பூர்வீகச்சொத்து ஆகிய மூன்றையும் என் மகனுக்கும், நத்தம்புறம்போக்கில் உள்ள வீட்டிற்கு கிழக்கு பக்கம் உள்ள காலிமனையை என் மகள்கள் 1, 2 பிரதிவாதிகளுக்கும் என் கணவர் எழுதி வைத்துள்ளார்.

பொன்னுசாமி மகன் சண்முகம் என்பவர் ஈசநத்தத்தில் மளிகைக்கடை வைத்து நடத்தி வருகிறார். என் மகன் 2ம் வாதி எந்த நேரமும், அந்த மளிகைக்கடையில் இருப்பார் என்றால் அந்த கடைக்கு போக வர இருப்பார். துரைசாமி மகன் சிவக்குமார் என்பவரின் சொந்த ஊர் துறையூர் என்றால் அவரது சொந்த ஊர் எது என்று எனக்கு தெரியாது. அவர் சிறுவயது முதல் அவரது பெற்றோருடன் ஈசநத்தத்தில் வசித்து வருகிறார். சிவக்குமார் என்பவர் ஈசநத்தத்தை விட்டு, வெளியே சென்று 15 வருடங்களாகிறது என்றால் சரிதான். அவர் கடை வைப்பதற்காக சென்றார். சிவக்குமாரும், என் மகன் நாட்ராயனும் நெருங்கிய நண்பர்கள் என்றால் என் கணவரும், சிவக்குமாரின் அப்பாவும் நண்பர்கள்.

பெரியம்மாளிடம் என் கணவர் கிரயம் வாங்கிய சொத்தில் 440 சதுர அடி அளவில் ஆஸ்பெஸ்டாஸ் கூரை போட்ட வீடு உள்ளது. பாகப்பிரிவினையில், என் கணவருக்கும், என் மகனுக்கும், என் மகள்களுக்கும் பிரிந்த சொத்தில் 800 சதுர அடி அளவில் தார்சு வீடு ........

உள்ளது என்றால் சரியல்ல. அது காலியிடம். என் கணவர் உயிருடன் இருந்தபோது, நானும், என் கணவரும் நத்தம்புறம்போக்கில் உள்ள வீட்டில் வசித்து வந்தோம். அந்த வீடு பெரியம்மாளிடம் கிரயம் வாங்கிய சொத்திற்கு வடபுறத்தில் உள்ளது. 2ம் வாதி, 1ம் பிரதிவாதிக்கு கிரயம் வாங்கி கொடுத்த சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. கிரய ஆவண விவரமும் எனக்கு தெரியாது. பாகப்பிரிவினையில் என் கணவருக்கும், என் மகனுக்கும், என் மகள்களுக்கும் சேர்ந்து சொத்து கிடைத்தது.

அரவக்குறிச்சி கூட்டுறவு வங்கியில் என் கணவர் கடன் வாங்கினார். அந்த கடன் தற்போது வரை தீர்க்கப்படவில்லை. உயில் எழுதிய விவரம், உயில் எழுதிய அன்றே எனக்கு தெரிய வந்தது. பாகப்பிரிவினை ஆவணத்திலும், கிரய ஆவணத்திலும் சர்வே எண். 702 என்பதற்கு பதிலாக சர்வே எண். 705 என தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளதை மறைத்து, தவறாக என் கணவருக்கு நான்கு சொத்துக்கள் சொந்தமானது என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவருக்கும், என் குடும்பத்திற்கும் சர்வே எண். 705ல் சொத்துக்கள் உள்ளன என நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. சர்வே எண். 705ல் உள்ள சொத்துக்களை நான் பார்த்துள்ளேனா என்றால் அந்த சொத்து என் வீட்டிற்கு பக்கத்திலேயே உள்ளது. 1ம் பிரதிவாதி, என் மீதும், என் மகன் மீதும் பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்த பின்னர், தாவா வா.சா.ஆ.6 உயிலை என் மகன் அவரது நண்பர்களுடன் சேர்ந்து, மோசடி செய்து, போலியாக உற்பத்தி செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா உயில் போலியானது என்றும், என் கணவர் எந்த காலத்திலும் உயில் எழுதி வைக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.6 உயிலில் உள்ள

கையெழுத்து என் கணவருடையதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 உயில் எந்தக்காலத்திலும் நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 உயில் பின்னிட்டு உற்பத்தி செய்த காரணத்தினால்தான், என் மகன் தாக்கல் செய்த அ.வ.எண். 344/2024 வழக்கிலும், மற்றொரு வழக்கிலும் அந்த உயில் பற்றிய விவரத்தை தெரிவிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் மகன் நிர்பந்தத்தின் காரணமாக பொய்யாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மகள் தாக்கல் செய்த அ.வ.எண். 344/2024 வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றும், நானும், என் மகனும் தாக்கல் செய்த வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. என் மகன் 2ம் வாதி செலவு செய்து வீடு கட்டினார் என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் பாகத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக நான், என் மகனுடன் சேர்ந்து பொய்யாக இவ்வழக்கை தாக்கர்ல செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2ம் பிரதிவாதி தரப்பில் எடுத்துரைப்பில்லை. 2ம் பிரதிவாதி அழைத்தும் ஆஜரில்லை. எனவே உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 17 விதி 2 விலக்கு வாசகம் (e)ன் படி சாட்சி 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்